செ.வெ.எண்:43 நாள்:18.12.2024.

# பத்திரிக்கைச்செய்தி

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சிவகங்கை மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்கு மருத்துவ உதவி, சட்ட உதவி, தங்கும் உதவி மற்றும் மனநல ஆலோசனை வழங்குவதற்கு இந்திய அரசின் சிறப்புத் திட்டம் One stop Centre என்னும் மையத்தில் ரூ.12,000/- தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பாதுகாவலர் பணிக்கு கீழ்க்கண்ட தகுதிகள் வாய்ந்த விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். கல்வித்தகுதி குறைந்தபட்சம் 10-ம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி. அரசு நிறுவனம் (அ) அரசுசாரா நிறுனத்தில் குறைந்தபட்சம் 2 வருட பாதுகாவலர் பணியில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும், பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 24 x 7 காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரை சுழற்சி முறையில் பணிபுரிய வேண்டும். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ, மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை-630561 என்ற முகவரிக்கு 24.12.2024 அன்று மாலை 5.45-க்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.